மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 04 திங்கட்கிழமை 21.08.2023 அதிர்வு 21

## பஸ்ஸுக்கு வெளியே தலையை நீட்டிய மாணவன் மின்கம்பத்தில் மோதிச் சாவு

கல்வி சுற்றுலாவிற்காக பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸின் மாணவர் ஒருவர் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டியதால் விபத்து ஏற்பட்டுள்ளது.

04




## நல்லூரானுக்குக் கொடியேற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பெருந்திரளான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் சிவச்சாரியார்களின் வேத மந்திரங்கள்

04

# மொட்டுவைப் பிளவுபடுத்த உள்ளேயும் வெளியேயும் சதி!

### இடமளியோம் என பஸில் சூளுரை

கொழும்பு, ஓகஸ்ட் 21

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் குழப்பத்தை ஏற்படுத்திக் கட்சியைப் பல பிரிவுகளாகப் பிளவுபடுத்த உள்ளுக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் சிலர் சதித்திட்டம் தீட்டுகின்றனர்.

04




## தோட்ட நிர்வாகத்துக்கு புரிந்த மொழியிலேயே பாடம் கற்பித்த ஜீவன்

### இ.தொ.கா. தலைவர் செந்தில் புகழாரம்

மாத்தளை, ரத்வத்தை தோட்டப் பகுதியில் தோட்டத் தொழிலாளி ஒருவரின் வீட்டை தோட்ட உதவி முகாமையாளர் அடித்து நொருக்கிய விவகாரத்துக்குத் தோட்ட முகாமையாளரின்

04







## ரணிலுக்கு ஆதரவாக 40 எம்.பிக்களை வளைத்துப் போட நிமால் லன்சா திட்டம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றிபெறுவதற்காக மொட்டுக் கட்சியின் ஆதரவைத் திரட்டுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அயராது பாடுபடுகின்றார் என அறியமுடிகின்றது.

04

### நானுஓயாவில் விபத்தில் சிக்கி

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் வைத்தியசாலையில்



நானுஓயாவில் கப் ரக வாகனமொன்று வீதியை விட்டு விலகி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

04

## அ'புர விபத்தில் தாய், மகள் பலி!

அநுராதபுரம், ஜெயந்தி மாவத்தையில் உள்ள கதிரேசன் கோவிலுக்கு முன்பாக இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர் என அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். சஷிகா துலானி வீரசிங்க (36) மற்றும் அவரது 8 வயது மகளான திசானி பிரியன்ஷா ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள், அதே திசையில் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து

04

# டக்ளஸ் - கருணா சந்திப்பு



முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு கடற்றொழில் அமைச்சில் இன்று நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தனியார் முதலீட்டாளர்களின் பிரதிநிதிகள் குழுவினரும் கலந்துகொண்டிருந்தனர்.

கடற்றொழில் அமைச்சர், சர்வதேச சந்தைகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டிற்கு தேவையான அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்வதுடன், கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தையும் வலுப்படுத்த முடியும் என்பதை அதிகாரிகள் மத்தியில் வலியுறுத்தி வருகின்றார்.

புலம்பெயர் முதலீட்டாளர்களின் பங்களிப்பிற்கான கோரிக்கையை முன்வைத்து வருவதுடன் தனியார் முதலீட்டாளர்களுக்கான ஒத்துழைப்பையும் ஊக்குவிப்பையும் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றார்.

இவ்வாறான பின்னணியில் இன்றைய கலந்துரையாடலில், புலம்பெயர் மக்கள் மத்தியிலுள்ள முதன்மை முதலீட்டாளர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# பாதுகாப்பு அமைச்சருடன் சிங்கப்பூரில் ரணில் பேச்சு

சிங்கப்பூருக்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிங்கப்பூர் பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி நெங் எங் ஹென் ஐச் சந்தித்துள்ளார்.

இதன்போது பூகோள அரசியல் மேம்பாடுகள் மற்றும் கடல்சார் நாடுகளின் பிராந்திய ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட தூதுக்குழுவினர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று அதிகாலை சிங்கப்பூர் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தண்ணிமுறிப்பில் மீனவரின் நான்கு படகுகள் தீக்கிரை!

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பில் மீனவர்களின் 4 படகுகள் நேற்று இரவு இனந்தெரியாத நபர்களால் முழுமையாக எரித்து தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்ற அப்பகுதியை சேர்ந்த மீனவர்களின் படகுகளே இவ்வாறு எரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பும் தண்ணிமுறிப்பு குள பகுதியில் வைத்து 6 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டிருந்தன. இவ்வாறு மீனவர்களின் படகுகள் தொடர்ச்சியாக சேதமாக்கப்பட்டு வருகின்றன எனவும் அப்பகுதி மீனவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இவ்வாறான சம்பவங்களுக்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குரிய இழப்பீட்டினை வழங்க வேண்டும் எனவும் மீனவர்களின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு கடவுச்சீட்டுகளை வைத்திருந்த பெண் கைது

நான்கு கடவுச்சீட்டுகளை வைத்திருந்த பெண் ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் சென்னையில் இருந்து அதிகாலை 4.40 மணியளவில் விமான நிலையத்தில் தரையிறங்கிய பெண்ணை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பொலிஸ் போதைப்பொருள் பிரிவு கைது செய்தது.

இந்தியாவில் பெற்றவை எனக் கூறி, நான்கு கடவுச்சீட்டுகளை இவர் சேலையில் மறைத்து வைத்திருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உள்ளூர்வாசிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கு ஏற்பாடு செய்யும் கடத்தல்காரர்களிடம் ஒப்படைப்பதற்காக இந்தப் பெண் கடவுச்சீட்டுகளை கொண்டு வந்திருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பெண் கல்பிட்டியை சேர்ந்த 48 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடவுச்சீட்டுகளுடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# 1000 மரக்கன்றுகள் நடும் திட்டம் செம்மணியில் இன்று ஆரம்பம்







வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் முன்னெடுக்கப்படும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில், பருவகால மாற்றத்தால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக 1000 மரக்கன்றுகள் நடும் செயற்றிட்டம் இன்று (21) யாழ். செம்மணி பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் செயலாளர் இ.பகீரதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். பிரணவநாதன், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் யு.ஜெலீபன், வலிகாமம் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் ந.கஜேந்திரகுமார், செம்மணி இந்து மயான தலைவர் இ.லட்சுமிகாந்தன், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் பா.பிரதீபன், நல்லூர் வடக்கு சனசமூக நிலைய தலைவர் பூ.லிங்கநாதன், நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய தலைவர் இ.ரூபன் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டு வைத்தனர்.

அத்துடன் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது வித்தியாலய மாணவர் சின்னம் சூட்டல்

( அஸ்ஹர் இப்றாஹிம்)



சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் மற்றும் நியமன கடிதம் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன.

பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் நடைபெற்ற நிகழ்வுக்கு சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என். எம்.அப்துல் மலீக், உதவி பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க, றியோ மார்க்கட்டிங் நிறுவன பணிப்பாளரும், முன்னாள் கல்முனை மாநகரசபை உறுப்பினருமான என்.எம்.றிஸ்மீர், சாய்ந்தமருது பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ரவூப், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், ஒழுக்காற்று சபை பொறுப்பாசிரியர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்றனர்.



# பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் இன்று கொடியேற்றம்





## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தோட்ட நிர்வாகத்துக்கு...

பாணியிலேயே அமைச்சர் ஜீவன் தொண்டமான் பதிலளித்துள்ளார் என கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மாத்தளை, ரத்வத்தை தோட்டத்தில் தோட்டத் தொழிலாளர் ஒருவரால் கட்டப்பட்ட வீட்டை தோட்ட உதவி முகாமையாளர் அடித்து நொறுக்கியிருந்தார். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான்,

"தோட்டத் தொழிலாளர்களுடன் நிர்வாகத்தினர் பேச்சுகள் மேற்கொண்டால் அதே அணுகுமுறையைத்தான் இ.தொ.காவும் தோட்ட முகாமையாளர்களிடம் கடைப்பிடிக்கும். மாறாக அடாவடித்தனத்தில் தொழிலாளர்களை அணுகினால் அதே பாணியில்தான் இ.தொ.கா. அவர்களுக்குப் பதிலளிக்கும்.

தோட்டத் தொழிலாளர்களை நாகரிகமாக நடத்த வேண்டும் என்பதில் இ.தொ.கா. உறுதியாகவுள்ளது. தோட்டங்களை மாத்திரமே கம்பனிகளுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மாறாக அங்கு வாழும் மக்களை அல்ல.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலத்தில் தோட்ட முகாமையாளருடன் சரிக்குச் சமமாக தொழிலாளர்கள் அமர்ந்து பேசும் நிலையை உருவாக்கினார்கள்.

இவ்வாறான சூழலில் தோட்டத் தொழிலாளர்களால் கட்டப்பட்ட வீட்டை இடித்தமையை இ.தொ.கா. வன்மையாகக் கண்டிப்பதுடன், அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஷ்வரன் ஆகியோர் மக்கள் பக்கம் நின்று செயற்பட்டுள்ளார்கள்.

இந்தத் தோட்டம் மட்டுமல்ல அடாவடித்தனத்தில் ஈடுபடும் அனைத்து முகாமையாளர்களுக்கும் இதுவொரு பாடமாக அமையும் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை." – என்றார்.

### பஸ்ஸுக்கு வெளியே...

ஹபராதுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ருமஸ்ஸல மலையை நோக்கி செல்லும் குறுக்கு வீதியில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸின் பின் இருக்கையில் பயணித்த மாணவன் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிய போது மின்கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த மாணவர் கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உடுபத்தாவ, குளியாபிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### அ' புர விபத்தில்...

இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை 37 வயதுடைய டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

### நல்லூரானுக்கு...

ஒலிக்க கொடியேற்றம் இடம்பெற்றது.

பெருமளவான பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் உட்பட பல்வேறு நேர்த்திகளில் ஈடுபட்டனர்.

செங்குந்த மரபினரால் வடிவமைக்கப்பட்ட கொடிச்சீலை பாரம்பரிய முறைப்படி நேற்று வேல் மடம் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு, அங்கு விசேட பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சிறிய தேரொன்றில் எடுத்து வரப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கையளிக்கப்பட்டது.

இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள மஹோற்சவம் எதிர்வரும் செப்டெம்பர் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள தீர்த்தத் திருவிழா வரையான 25 நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

### ரணிலுக்கு ஆதரவாக...

தனக்கான ஆதரவு மொட்டுக் கட்சி ரீதியாகக் கிடைக்காது என்று தெரிந்துவிட்டதால் மொட்டுக் கட்சியில் உள்ள பலரை வளைத்துப் போடுவதற்கு ரணில் நடவடிக்கை எடுத்து வருகின்றார் எனவும் தெரியவருகின்றது.

அதற்கமைய மொட்டுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் நிமால் லன்சா தலைமையில் ரணிலுக்கு ஆதரவு திரட்டும் கூட்டமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

அந்தக் கூட்டமைப்பில் முக்கியமாக மொட்டு எம்.பிக்கள் 40 பேரை இணைப்பதற்கு நிமால் லன்சா உறுதிபூண்டுள்ளார் எனவும் அறியமுடிகின்றது.

### மொட்டுவைப் பிளவுபடுத்த...

எந்தச் சதியாலும் மொட்டுக் கட்சியைப் பிளவுபடுத்த முடியாது,

அதற்கு இடமளியோம் என்பதை வெளிப்படையாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரும் முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மொட்டுக் கட்சியை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்றனர். அவர்களை நாம் இலகுவில் அடையாளம் கண்டுள்ளோம். அவர்களுக்கான தண்டனையை எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் வழங்குவார்கள்.

ஜனாதிபதித்தேர்தல்உள்ளிட்டஅனைத்துத் தேர்தல்களையும் எந்நேரமும் எதிர்கொள்ள மொட்டுக் கட்சி தயாராகவுள்ளது.

ஒவ்வொரு தேர்தல்களிலும் தரமான வேட்பாளர்கள் களமிறங்குவார்கள். மொட்டுக் கட்சி தோற்ற சந்தர்ப்பம் எக்காலத்திலும் இருக்கமாட்டாது." – என்றார்.

### ஒரே குடும்பத்தை...

கொழும்பு – பிலியந்தலையிலிருந்து நுவரெலியா நகருக்குப் பயணித்த இந்தக் கப் ரக வாகனம் கிரிமிட்டி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையால் விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூரில் வெள்ளோட்டம்













**நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்குப் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள சப்பற வெள்ளோட்டம் நேற்று (20) இடம்பெற்றது.**





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொறுப்பற்ற நடவடிக்கை

விசேட வைத்திய நிபுணர்கள், அறிவு ஜீவிகள், கற்றறிந்தோர், வள ஆளணியினர் என நாட்டின் முக்கிய துறைகளைச் சேர்ந்த மூளைசாலிகள் பெரும் எண்ணிக்கையில் நாட்டை விட்டு வெளியேறும் ஓர் இக்கட்டு குறித்து அடுத்தடுத்து செய்திகள் வெளியாகி வருகின்றன.

இவ்விடயம் தொடர்பில் அரசு 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற பாணியில் பதில் நடவடிக்கைகளை அவசரப்பட்டு எடுக்காமல், பொறுப்புடன் விடயங்களைக் கையாள வேண்டும் என்று இப்பத்தியில் குறிப்பிட்டு இருந்தோம்.

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

- என்றான் திருநாப் போதகன் வள்ளுவப் பெருந்தகை.

அதாவது நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணமாராய்ந்து, அது தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும்படியாக மருத்துவம் செய்ய வேண்டும்.

இப்போது புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறும் விடயத்திலும் காரணங்கள், குணங்குறிகளை ஆராய்ந்து, மூலப் பிரச்சினைக்கு முடிவு தரும் வகையில் மருந்து செய்ய வேண்டும். தீர்வு காண வேண்டும்.

ஆனால் அத்தகைய பொறுப்புணர்வோடு அரசு செயற்படுவதாகத் தெரியவில்லை.

நாட்டில் பணியாற்றய வேண்டிய பொறுப்பைத் தவிர்த்து, வெளிநாடு சென்றிருக்கும் அல்லது நாட்டுக்குத் திரும்பாமல் வெளிநாட்டில் தங்கியிருக்கும் சுமார் 120 விசேட வைத்தியர்களை கறுப்புப் பட்டியலில் இணைத்து அறிவிப்பு வெளியிட்டு இருக்கின்றது அரசு. அது பயனற்ற - அவசரப்பட்டு எடுக்கப்பட்ட - முடிவாகவே தெரிகின்றது.

கறுப்புப் பட்டியலில் இருக்கும் வைத்தியர்கள் தமது தாய் நாட்டுக்குத் திரும்பலாம். தடையேதும் இல்லை. கொடுக்கல் - வாங்கல்களிலும், வழமையான வாழ்வியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம். ஆக, இலங்கையில் அவர்கள் மருத்துவர்களாகப் பணி புரிய முடியாது. அவ்வளவே.

இலங்கையில் பணிபுரியும் எண்ணமே இல்லாமல்தானே அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறார்கள்? அவர்களுக்கு இங்கு கறுப்புப் பட்டியல் தடைவிதித்து யாது பயன்? அவர்கள் திறமைசாலிகள். சான்றிதழும் அங்கீகாரமும் பெற்ற வைத்தியர்கள். விசேட நிபுணர்கள். வெளிநாட்டுக் கதவுகள் அவர்களுக்காக அகலமாக - தாராளமாக - திறந்தே கிடக்கின்றன. அத்தகையோரை இந்தக் கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் அல்லது இலங்கையில் மருத்துவராகப் பணிபுரிய அனுமதி மறுக்கும் நடவடிக்கை எந்த வகையில் பாதிக்க முடியும்?

இத்தகைய தூர திருஷ்டியற்ற நடவடிக்கைகள் இங்கு மிச்சம் சொச்சமாக எஞ்சியிருக்கும் விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் மருத்துவர்களையும் வெளிநாட்டுக்குக் கிளம்பி விட நெண்டித் தள்ளி, வழி செய்யுமேயன்றி, அவற்றால் வேறு பயன் கிட்டப் போவதில்லை. இருக்கின்ற மிச்ச வைத்தியர்களையும் தீவிர தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இத்தகைய அவசர புத்திச் செயற்பாடுகள் தூண்டிவிடும் என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

விசேட மருத்துவ நிபுணர்கள் உட்பட மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்காக பெட்டி படுக்கைகளைக் கட்டும் நிலைக்கு ஏன் போகிறார்கள் என்ற மூல காரணத்தைக் கண்டு பிடிக்காமல், அதற்குத் தீர்வு காணாமல், இவ்வாறு பெறுபேறுகளுக்கான - விளைவுகளுக்கான - தடுப்பு நடவடிக்கைகள் பலனேதும் விளைவிக்கப் போவதில்லை. மாறாகப் பாதிப்புகளையே அதிகரிக்கச் செய்யும்.

# 6 மாதங்களுக்குப் பின்னரும் சான்றிதழ்கள் செல்லுபடியாகும்

### பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிப்பு

பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் வழங்கப்படும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் 6 மாதங்களுக்குப் பின்னரும் செல்லுபடியாகும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஆவணங்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும் என்ற முந்தைய விதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளது என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வழங்கப்பட்ட எந்தவொரு சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகல் இருந்தால், புதிய நகலை பெற வேண்டிய அவசியமில்லை என்றும் திணைக்களம் தெரிவிக்கிறது.

இது தொடர்பில் பதிவாளர் நாயகம் திணைக்களம், கல்வி, வெளிவிவகார அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு மற்றும் ஆள்கள் பதிவு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது.

எனினும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு பதிவேட்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் மட்டுமே புதிய நகலை சமர்ப்பிக்க வேண்டும் என பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவிக்கின்றது.

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி மட்டக்களப்பில் போராட்டம்

### 30 ஆம் திகதி நடத்த ஏற்பாடு



வடக்கு – கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி எதிர்வரும் 30 ஆம் திகதியன்று மட்டக்களப்பில் மாபெரும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இப்போராட்டம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில், வடக்கு கிழக்கிலுள்ள 8 மாவட்ட சங்கங்களும் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

மட்டக்களப்பு-கல்லடி பாலத்திருந்து எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியளவில் பேரணி ஆரம்பமாகி, மட்டக்களப்பு -காந்தி பூங்கா அருகில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத் தூபியருகில் பேரணி நிறைவு பெறும். அங்கு நீதி கோரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என கூறப்படுகின்றது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்குச் சிவில் சமூக அமைப்புகள், பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாணவ அமைப்புகள், தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள அரசியல் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

வடக்கு – கிழக்கில் தமது உறவுகளுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்குத் தமிழ் தேசியப் பரப்பில் உள்ள அனைத்து தரப்பினரையும் ஒன்றிணையுமாறு மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# சம்மாந்துறை வலய மட்டப் போட்டி: நாவிதன் வெளிக்கோட்டம் முதலிடம்!



(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் 469 புள்ளிகளைப் பெற்று நாவிதன்வெளிக் கோட்டம் முதலிடத்தை சுவீகரித்துக் கொண்டது.

இரண்டாம் இடத்தை 435 புள்ளிகளைப் பெற்ற சம்மாந்துறை கோட்டமும், மூன்றாம் இடத்தை 183 புள்ளிகளைப் பெற்ற இறக்காமம் கோட்டமும் பெற்றுக் கொண்டன.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

171 ஆண்களும் 298 பெண்களும் பங்குபற்றி 469 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர். சம்மாந்துறை கோட்டத்தில் 195 ஆண்களும் 240 பெண்களும் பங்குபற்றி 435 புள்ளிகளைப் பெற்றனர்.

இறக்காமம் கோட்டத்தில் 183 ஆண்கள் பங்குபற்றி 183 புள்ளிகளை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. அங்கு பெண்கள் கலந்து கொள்ளவில்லை.

போட்டிகள் யாவும் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

# கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இருவருக்கும் விளக்க மறியல்

(றிபாஸ்)

கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட இரு நபர்களை 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி கே.சமீம் உத்தரவிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாகாமம், வீதியில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 750 மில்லிகிராம் கஞ்சாவும் அட்டாளைச்சேனையில் பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 45 மில்லி கஞ்சாவும், 90மில்லிகிராம் ஐஸ்போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சந்தேக நபர்கள் கஞ்சா வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ். எம். சதாத் தலைமையில் பொலிஸ் சாஜன்களான தாஹீர், அனஸ் ஆகியோர் குறித்த பிரதேசத்துக்குச் சென்று நபர்களை கைது செய்தனர். நேற்று (20) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே சந்தேக நபர்களுக்கு இந்த விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரனைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தனிப்பட்ட தகராறு காரணமாக நபர் ஒருவர் அடித்துக் கொலை

எலபாத – ஹல்தொல கரங்கொட பிரதேசத்தில் நபர் ஒருவர் இரும்பால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்றிரவு (20) இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த 42 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கொலையை செய்த சந்தேகநபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்றும் சந்தேக நபரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை எலபாத பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெருந்தோட்டத்துறை மக்களுக்கான காணி உரிமை அமைச்சரவைப் பத்திரம்

## விரைவில் தாக்கல் செய்யப்படும் என்கிறார் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான்

இலங்கையில் பெருந்தோட்டத் துறை மக்களுக்கான காணி உரிமை தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று விரைவில் தாக்கல் செய்யப்பட வுள்ளது என்று தோட்ட உட்கட்ட மைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

மாத்தளை ரத்வத்தை தோட்ட நிர் வாகத்தின் நடவடிக்கை குறித்து கருத் துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இந்த நிலையில், மாத்தளை மாவட் டத்தில் எல்கடுவ அரச பெருந்தோட்ட நிறுவனத்துக்கு உட்பட்ட ரத்வத்தை தோட்டப் பகுதியில் இருந்து அங்கு வசித்த மக்களை அத்துமீறி வெளி யேற்றியமை தொடர்பில், உதவி தோட்ட முகாமையாளர் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

மாத்தளை, ரத்வத்தை தோட்டப் பகுதியில் தோட்டத் தொழிலாளர் ஒரு வரின் தற்காலிக குடியிருப்பு ஒன்றை உதவி முகாமையாளர் ஒருவர் சேதப் படுத்துவது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகி



யிருந்தது.

குறித்த விடயம் தொடர்பாக ஆராய் வதற்காக அமைச்சர் ஜீவன் தொண்ட மான் நேற்று (20)நேரில் சென்றிருந் திருந்தார்.

இதன்போது, எல்கடுவ அரச பெருந் தோட்ட நிறுவனத்தின் தலைவருக்கும், அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு வுக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், உதவி தோட்ட முகாமையாளரும், அந்த கலந் துரையாடலுக்கு அழைக்கப்பட்ட நிலை யில், அவர் சம்பவ இடத்துக்கு பிரவே சித்த போது, அமைதியின்மை ஏற்பட் டிருந்தது.

அதன் பின்னர் சம்பவத்துடன் தொடர் புடைய உதவி முகாமையாளரை பணி நீக்கம் செய்வதற்கும் பாதிக்கப் பட்ட குடும்பத்துக்கு புதிய வீட்டை நிர் மாணிக்கவும் தோட்ட நிர்வாகம் இணக்கம் தெரிவித்துள்ளது என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்த நிலையில், இவ்வாறான சம் பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறு வதுடன், அதனை நிவரத்தி செய்யும் முகமாக தோட்ட உட்கட்டமைப்பு அபி விருத்தி அமைச்சு, பெருந்தோட்டத் துறை அமைச்சு, மற்றும் காணி அமைச்சு என்பன இணைந்து அமைச்சர வைப் பத்திரம் ஒன்றை தாக்கல் செய்யவுள்ளன என்று அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

# வாகன விபத்தில் ஒருவர் காயம்!



ஹட்டன் – நுவரெலியா பிர தான வீதியின் கொட்டகலை நகரில் மோட்டார் வாகனமும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் ஓட்டோ சாரதி படு காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் கொட்ட கலை பிரதேச வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக் காக டிக்கோயா ஆரம்ப வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்று (20) மாலை 6 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. அதிவேக மாகப் பயணித்த மோட்டார் வாகனம், பௌசர் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போது எதிர்திசையில் பயணித்த ஓட்டோவுடன் மோதியுள்ளது.

விபத்தில் ஓட்டோ மற்றும் மோட்டார் வாகனத்துக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. மோட்டார் வாகனத்தின் சாரதி திம்புல பத்தனை பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள் ளார்.

# குளவி கொட்டுக்கு இலக்காகி சிறுவன் ஒருவன் உயிரிழப்பு!

நுவரெலியா – பம்பரக் கலை பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்காகி 16 வயதுடைய சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், குளவி கொட் டுக்கு இலக்காகிய மேலும் மூவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின் றனர்என்றுபொலிஸ்ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

பம்பரக்கலை பகுதியில் விறகு சேகரிப்பதற்காகச் சென்ற போது, அவர்கள் குளவி கொட்டுக்கு இலக் காகியுள்ளனர் என்று பொலி ஸாரின் ஆரம்பக்கட்ட விசா ரணைகளில் தெரிய வந்துள் ளது.

குளவி கொட்டுக்கு இலக் கானநான்குபேரும்சிகிச்சை களுக்காகநுவரெலியாபொது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தனர்.

அதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நுவரெலியா–பம்பரக் கலையை சேர்ந்த 16 வயது டைய சிறுவனே உயிரிழந் துள்ளார் என்று கூறப்படு கின்றது.

உயிரிழந்தவரின் சடலம் தொடர்பான பிரேதப் பரி சோதனை இன்று (21) நுவ ரெலிய பொது வைத்திய சாலையில் இடம்பெறவுள் ளது.






# சாவகச்சேரியில் அதிகரிக்கும் திருட்டுகள்:

## பொது மக்களை எச்சரிக்கும் பொலிஸார்!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரியில் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படும் திருட்டுகள் தொடர்பாக பொதுமக்களை எச்சரிக் கையாக இருக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத் துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் அண்மைக் காலமாகப் பகல் மற்றும் இரவு வேளைகளில் வீடுகள் உடைக்கப்பட்டு பெறுமதிமிக்க தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான உடமைகள் களவு போவதாக முறைப் பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

எனவே பொதுமக்கள் தங்களின் பெறுமதியான உடமைகளை பாதுகாப் பாக வைப்பதுடன், வீட்டை விட்டு வெளி யேறும் போது கதவு மற்றும் ஜன்னலை பாதுகாப்பாக பூட்டிவிட்டு, அருகில் உள்ள நம்பிக்கையான ஒருவருக்கு தெரியப்படுத்திவிட்டு செல்வது சிறந்தது.

அத்துடன் பிரதேசத்தில் அறிமுகம் இல்லாதவர்களின் நடமாட்டம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துங்கள்.

சந்தேகத்துக்கு இடமான வாகன இலக்கங்களை குறித்து வைப்பதும் களவுகளை தடுப்பதற்கு வசதியாக அமையும்.

பொதுமக்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குள் ஏதேனும் அசம் பாவிதங்கள் இடம்பெறும் பட்சத்தில் 0212270722 என்ற பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் எனவும் மேலும் அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

அத்துடன் களவுகள் தொடர்பாக சாவகச்சேரி பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் பொலிஸாரால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இந்திய அரசின் உதவியுடன் நாடு முழுவதும் 1,401 வீடுகள்

## வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தகவல்

இந்திய அரசின் உதவியுடன் நாடு முழுவதும் 101 கிராமங்களில் ஆயிரத்து 401 வீடுகளின் கட்டுமானப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன என்று தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் இதுவரை 661 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 338 வீடுகளின் நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இந்திய அரசின் உதவியுடன் நாடளா விய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வரும் 101 கிராமங்களில் 7 கிராமங்களில் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கம் பஹா, கண்டி, வவுனியா, பதுளை, அனு ராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட கிராமங்கள் மக்களிடம் கையளிக்கப் பட்டுள்ளன. மாத்தளை, கிளிநொச்சி, புத்தளம் ஆகிய கிராமங்களில் வீடு நிர்மாணப் பணிகள் நிறைவடைந் துள்ளன.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள வீடுகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 400 ஆகும். எஞ்சியுள்ள கிராமங்களின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்துமாறு விட யத்துக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்திய உதவி வீட்டுத் திட்டம் பல கட்டங்களில் செயல்படுகிறது. நாடு முழுவதும் உள்ள 25 மாவட்டங்களை யும் உள்ளடக்கிய வீடமைப்புத் திட்டம் முதலாவது திட்டமாகும். அங்கு, ஒரு மாவட்டத்துக்கு 24 வீடுகள் கொண்ட மாதிரி கிராமம் கட்டப்படும். இதன் கீழ் நாடளாவிய ரீதியில் 600 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இரண்டாவது திட்டம் வட மாகாணத் தில் இந்திய உதவி வீட்டுத் உதிட்டம் ஆகும். வடமாகாணத்தின் 5 மாவட் டங்களையும் உள்ளடக்கி 24 மாதிரிக் கிராமங்கள் நிர்மாணிக்கப்படும். இதன் கீழ் கட்டப்படும் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 600 ஆகும்.

மூன்றாவது திட்டம் தென் மாகாணத் தில் இந்திய உதவி வீட்டுத் திட்டம். கிராம சக்தி வீட்டுத் திட்டம் என்று பெயரிடப்பட்ட இது இரண்டு கட்டங்களாக செயல்படுத் தப்படுகிறது. மொத்தம் 52 மாதிரி கிரா மங்கள் கட்டப்பட உள்ளன. இதன் கீழ் கட்டப்படும் மொத்த வீடுகளின் எண் ணிக்கை ஆயிரத்து 200 ஆகும்.

இந்தத் திட்டம் இந்திய அரசு வழங்கும் நிதியில் செயற்படுத்தப்படுகிறது. இத் திட்டத்துக்காகச் செலவிடப்படும் மொத்தத் தொகை ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவாகும். அதில் 780 மில்லியன் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. நிர்மாணப் பணிகளின் இறுதிக் கட்டத் தில் 419 மில்லியன் ரூபா வீடுகளுக்காக பெறப்படும் என்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித் துள்ளது.

இந்திய உதவியின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் ஒரு பயனாளிக்கு 5 லட்சம் ரூபா மற்றும் திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு லட்சம் ரூபா உதவித் தொகையாக மொத்தம் 6 லட்சம் ரூபா மீளப்பெற முடியாத அடிப் படையில் வழங்கப்படுகிறது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சும் தேசிய வீடமைப்பு அபி விருத்தி அதிகார சபையும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின் றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஹிமாச்சல் மாநிலத்தில் வெள்ளப் பெருக்கு: 338 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு!








இந்தியாவின் ஹிமாச்சல் மாநிலத்தில் நிலவும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்குண்டு இதுவரை 338 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 38 பேர் வரை காணாமல் போயுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளத்தினால் இதுவரை 8 கோடி இந்திய ரூபாவுக்கு அதிக மான சொத்துக்களுக்கு சேதம் விளை விக்கப்பட்டுள்ளது.

ஹிமாச்சல் மாநிலத்தின் பல பகுதிகளுக்கு செம்மஞ்சள் நிற வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கனமழை காரணமாக நிலச்சரிவு, திடீர் வெள்ளப் பெருக்கு, பயிர்ச் சேதம் போன்ற பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், உத்தராகண்ட் மாநிலத்தில் டேராடூன், பாரி, நைனிடால், சம்பாவாட், பாகேஸ்வர் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் தொடர்ந்தும் அதிகனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாப் மாநிலத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 16 பேர் உயிரிழப்பு



பஞ்சாப் மாநிலத்தில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் காயமடைந்த மேலும் 15 பேர் வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என ஊட கங்கள் தெரிவித்துள்ளன.

40 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து ஒன்று எரிபொருள் ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்றுடன் மோதியதை தொடர்ந்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

விபத்திற்கு உள்ளான வாகனங்கள் வெடித்து தீப்பற்றியுள்ளன என பொலி ஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெண்களும் சிறுவர்களும் அடங்குகின்றனர்.

சிகிச்சைகளுக்காக மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் நால்வரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## மக்கள் ஏமாற மாட்டார்கள்: வானதி சீனிவாசன்

முதல் தலைமுறை இந்தி எதிர்ப்பு போராட்டம், மூன்றாம் தலைமுறை நீட் எதிர்ப்பு போராட்டம் என்ற தி.மு.கவின் நாடகத்துக்கு தமிழக மக்கள் ஏமாற மாட்டார்கள் என்று பா.ஜ.க. மகளிரணி தேசியத் தலைவர் வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில், உச்ச நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட நீட் தேர்வை, உச்ச நீதிமன்ற உத்தரவில்லாமல் ரத்து செய்ய முடியாது என்பது தெரிந்தும் பொய்யான வாக்குறுதி அளித்து தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. அது மட்டுமல்ல ஒவ்வோர் ஆண்டும் நீட் தேர்வு இருக்காது என தி.மு.க.வினர் பிரசாரம் செய்கின்றனர்.

இதனால் தான் தற்கொலை செய்து கொள்ளும் சூழலுக்கு சில மாணவர்கள் தள்ளப்படுகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

# உக்ரைனுக்கு எப் -16 போர் விமானங்களை வழங்க நெதர்லாந்து, டென்மார்க் இணக்கம்!




உக்ரைனுக்கு எப்-16 என்ற அதிநவீன போர் விமானங்கள் வழங்கப்படும் என நெதர்லாந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

இது தொடர்பில் குறித்த இரண்டு அரசாங்ககளுடனும் உக்ரைன் அதிகாரிகள் தொடர்ச்சியாக கலந்துரையாடி வந்தனர்.

இருப்பினும் அதற்கு அமெரிக்காவின் ஒப்புதல் கிடைக்கவில்லை.

எப்-16 போர் விமானங்கள் அமெரிக்காவில் தயாரிக்கப்படுகின்றமையால் அதற்கு அமெரிக்காவின் அனுமதி அவசியமாகும்.

இந்தநிலையில் எப்-16 விமானங்களை ஏனைய நாடுகளுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்பின்னர் உக்ரைனுக்கு எப்-16 போர் விமானங்கள் வழங்கப்படும் என நெதர்லாந்து மற்றும் டென்மார்க் அரசாங்கள் அறிவித்துள்ளன.

## அமெரிக்காவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்!



அமெரிக்காவின் தென் கலிபோர்னியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோளில் 5.1 மெக்னிடியுட்டாக பதிவாகியுள்ளது.

தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ஓஜாய் நகருக்கு தென்கிழக்கே நான்கு மைல் தொலைவில் குறித்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், இது பல பிரதேசங்களில் உணரப்பட்டுள்ளதுடன், நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு: 11 பேர் பலி!



பாகிஸ்தானின் வடக்கு வஜிரிஸ்தான் பகுதியில் குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அங்குள்ள இராணுவச் சாவடியில் கட்டுமான பணிக்கு செல்லும் போது தொழிலாளர்கள் சென்ற மகிழுந்தில் வெடிகுண்டு வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது.

இந்த குண்டு வெடிப்பில் 11 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்திற்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

குண்டுவெடிப்பில் பலியானவர்கள் தெற்கு வஜிரிஸ்தானில் உள்ள மக்கின் மற்றும் வானா தெஹ்சில் பகுதியை சேர்ந்தவர்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பாடசாலைகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ள லெபனானில் ஆயுத குழு!




மிகப்பெரிய பாலஸ்தீன அகதிகள் முகாமான ஐன் அல்-ஹெல்வேயில் ஆயுதம் ஏந்திய குழுவினர் 7 பாடசாலைகளை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்பாட்டுக்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

குறித்த நடவடிக்கையினால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதால், உடனடியாக அந்த பாடசாலைகளை விட்டு வெளியேறவேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், பாலஸ்தீனத்தில் நிலவும் உள்நாட்டு போரினால் லெபனானில் அதிகமான பாலஸ்தீனியர்கள் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949